





கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் காட்டுமன்னார்கோயிலில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர், வேளாண்மை – உழவர்நலத்துறை அமைச்சர் எம் .ஆர் .கே. பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். ஓரணியில் தமிழ்நாடு, இல்லம் தோறும் சென்று, கழக உறுப்பினர் சேர்க்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. தொகுதி பொறுப்பாளர்கள், மாநில, மாவட்ட,ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கடலூர் கிழக்கு மாவட்டத்தில் “ஓரணியில் தமிழ்நாடு” இல்லங்கள்தோறும் சென்று

# கழக உறுப்பினர்களை தீவிரமாகச் சேர்ப்போம்!

### மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், ஜுன் 18-

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம்,16.06.2025, திங்கள் கிழமை, மாலை 4 மணி அளவில், காட்டுமன்னார் கோவில் எம்.ஆர்.கே கலையரங்கத்தில், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.

கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர்கள் ஏ.அங்கையர்கன்னி, விஜயன்ராகவன், சுவை.சுரேஷ், எம்.எம்.சிவா,அ.பாரிபாலன்,

முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன்,ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், தொகுதி பொறுப்பாளருமான

எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், கடலூர் கிழக்கு மாவட்டத்தில் 20ம் தேதி முதல்

ஓரணியில் தமிழ்நாடு என்ற கழக தலைவர் அவர்களின் அறிவிப்பினை அமல்படுத்தும் விதமாக இல்லங்கள்தோறும் கழக நிர்வாகிகள் சென்று பொது மக்களை சந்தித்து கழகத்தில் உறுப்பினர்களை சேர்த்திடல் வேண்டும்,

உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் கலைஞர் உரிமைத் திட்டத்தில் விடுபட்ட பெண்கள் தங்களுடைய பகுதிகளிலேயே ஜுலை 15 முதல் அக்டோபர் மாதம்வரை விண்ணப்பிக்கலாம் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட கழக துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதாசம்பத், ஒன்றிய செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் மேற்கு அ.முத்துசாமி, குறிஞ்சிப்பாடி தெற்கு வி.சிவக்குமார், திருமுட்டம் கிழக்கு தங்க. ஆனந்தன், குறிஞ்சிப்பாடி வடக்கு ஆர்.நாராயணசாமி,

கம்மாபுரம் தெற்கு கே.ஆர்.ராயர், கம்மாபுரம் வடக்கு பா.திருமாவளவன், கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்கு பி.சுப்பிரமணியன், கடலூர் தெற்கு ஆர்.விஜயசுந்தரம்,

குமராட்சி கிழக்கு த.சங்கர், குமராட்சி தெற்கு ம.சோழன், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி, குமராட்சி மேற்கு கே.நடராஜன், பரங்கிப்பேட்டை தெற்கு ஆர்.கலையரசன், பரங்கிப்கிப்பேட்டை பேரூராட்சி தலைவர் தேன்மொழி சங்கர், எம்.மனோகரன், புவனகிரி கிழக்கு ஏ.எஸ்.மதியழகன், கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி. சபாநாயகம், கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி, திருமுட்டம் வடக்கு எஸ். செந்தில்குமார், திரு முட்டம் மேற்கு கே.ஆர். கோவிந்தராஜ், குமராட்சி மத்திய ஆர்.ராஜேந்திரன், பரங்கிப்பேட்டை தெற்கு இரா.கலையரசன், புவனகிரி மேற்கு ஏ.எம்.மதியழகன், புவனகிரி மத்திய வெற்றிவேலு , கீரப்பாளையம் மத்திய வி.பி.பாலு, கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன்,கடலூர் மத்திய கே. மகேஷ், காட்டுமன்னார் கோவில் த.ஜெயபாண்டியன், கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, வடலூர் நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ்.விஜயராகவன், இரா.தமிழரசன், ச. கல்யாணசுந்தரம், வி.பி. பாலு, மு.வெற்றிவேல், என்.டி.கணேசன், மஞ்சு, பா.கோதண்டபாணி,

பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப. ஜெய்சங்கர், சேத்தியாதோப்பு ப. மனோகரன், திருமுட்டம் பூ.செல்வகுமார், புவனகிரி த.கந்தன், அண்ணாமலை நகர் க.பழனி, லால்பேட்டை எம்.அன்வர்சதாத், பரங்கிப்பேட்டை மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: மாணவரணி அமைப்பாளர் அப்பு ஆர்.சந்தியநாராயணன், பொறியாளர் அணி அப்பு சந்திரசேகரன், தொண்டரணி ஆராமது, விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் அணி ம.இராமசாமி, மகளிர் அணி த.அமுதராணி, மகளிர் தொண்டரணி, ப.மனோரஞ்சிதம், வழக்கறிஞர் அணி பி.அருள்ஜோதி, ஆதி திராவிடர் நல்லக்குழு ஆர். பரந்தாமன், சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு எம்.எஸ்.முகமது யூனூஸ், வர்த்தகர் அணி ஆர்.ரெங்கநாதன், தொமுச பி.பழனிவேல், தகவல் தொழில் நுட்ப அணி ஏ.ஜாபர் அலி,

விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார், மீனவர் அணி வீ.செல்வபாரதி, அயலக அணி வாசு, தொழிலாளர் அணி கி.தண்டபாணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி தாணூர் சிவக்கொழுந்து, இலக்கிய அணி பழனிசாமி, டி.வெங்கடா ஜலபதி, கலை இலக்கிய பிரிவு, ஜி.சின்னமணி, தகவல் தொழில்நுட்ப அணி அ.முத்தமிழ்செல்வன், வி.எம். வெற்றிசெல்வன், ப.பிரவின்குமார் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம்மரக்காணம் ஒன்றியம் ஆத்தூர் ஊராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 1 கோடியே 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்ஆத்தூர் ஊராட்சியில் இருந்து வட ஆலபாக்கம், மானூர் செல்லும் சாலையை தரம் உயர்த்தி புதிய தார் சாலை அமைப்பதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார்.உடன் மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, மாவட்ட ஊராட்சி குழு துணை சேர்மன் ஷீலா தேவி சேரன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,வட்டார வளர்ச்சி அலுவலர் சிலம்பு செல்வன், ஒன்றிய பொறியாளர் நிவாஸ், ஊராட்சி மன்ற தலைவர்கள் மன்னார் ,ரமேஷ், குமாரி லட்சுமி காந்தன், சிவக்குமார் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.



மதுரை மாவட்டம் , அரசுப் பள்ளியில் பயின்று நீட் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ள 6 மாணவிகள், சட்டப் படிப்பிற்கான clat தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள ஒரு மாணவி என மொத்தம் 7 மாணவிகளுக்கு அமைச்சர் பி. மூர்த்தி தனது சொந்த நிதியிலிருந்து மடிக்கணினிகளை பரிசாக வழங்கி, பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தார்.

### ‘நீட்’ தேர்வு – சட்டப்படிப்புத் தேர்வில்

# சாதனை படைத்த 7 மாணவிகளுக்கு மடிக்கணினிகள்!

### அமைச்சர் பி.மூர்த்தி தமது சொந்த நிதியிலிருந்து வழங்கினார்!

மதுரை, ஜுன் 18-

மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட யா. ஒத்தக்கடை அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று முன்தினம் (16.06.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, அரசுப் பள்ளியில் பயின்று இளங்கலை மருத்துவ படிப்புக்கான நீட் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ள 6 மாணவிகள், சட்டப் படிப்பிற்கான CLAT தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள ஒரு மாணவி என யா. ஒத்தக்கடை அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியை சார்ந்த 7 மாணவிகளுக்கு, தனது சொந்த நிதியிலிருந்து மடிக்கணினிகளை பரிசாக வழங்கி, பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

தொடர்ந்து, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அவர்கள் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் தளபதியார் தலைமையிலான இந்த திராவிட மாடல் அரசு, தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவக் கனவை சிதைக்கும் நீட் தேர்வை தொடக்கத்தில் இருந்தே எதிர்த்து வருகிறது.

தமிழ்நாட்டில் நீட் தேர்வு விலக்கு தொடர்பாக பல்வேறு சட்டபூர்வமான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் நடப்பாண்டில் மருத்துவ இளங்கலை படிப்புக்கான நீட் தேர்வில் மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட யா. ஒத்தக்கடை அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சார்ந்த மாணவிகள் செல்வி. கன்னிகா (539 மதிப்பெண்கள்), செல்வி.ஜெக ஸ்ரீமா (522 மதிப்பெண்கள்) செல்வி.பிரியங்கா (466 மதிப்பெண்கள்), செல்வி. சிவானி (414 மதிப்பெண்கள்), செல்வி.சுருதி (350 மதிப்பெண்கள்), செல்வி. ராகவி (310 மதிப்பெண்கள்) தங்களது கடின முயற்சியால் அதிக மதிப்பெண் பெற்று நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

அதேபோல, இப்பள்ளியில் பயின்ற செல்வி.ஆர். ரிஷிவர்த்தினி என்ற மாணவி JEE மற்றும் சட்டப் படிப்பிற்கான CLAT ஆகிய இரண்டு தேர்வுகளிலும் வெற்றி பெற்றுள்ளார்.

மேலும் வழக்கறிஞர் ஆவதே தனது இலட்சியம் என்ற நோக்கில் CLAT தேர்வில் பெற்ற வெற்றியின் மூலம் அவருக்கு திருச்சியில் உள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் படிக்க இடம் கிடைத்துள்ளது. இந்த மாணவிகளின் வெற்றி தமிழ்நாட்டில் உள்ள அரசு பள்ளிகளின் கல்வித்தரத்தை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. கடினமாக உழைத்து தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்றுள்ள மாணவிகளுக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்களின் உயர் கல்விக்கு உதவிடும் நோக்கில் எனது சொந்த நிதியில் இருந்து மடிக்கணினிகளை பரிசாக வழங்கி ஊக்குவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், இம்மாணவிகளின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மா.சௌ. சங்கீதா, ஆசிரியப் பெருமக்கள், மாணவியர்கள் உடன் இருந்தார்கள்.

### பனை நல வாரியம் அமைத்து பல்வேறு திட்டங்களால் பயன்பெறுகின்றனர் !

# பனைத் தொழிலாளர்களின் பாதுகாவலராக திகழ்கிறது தமிழ்நாடு அரசு!

### எர்ணாவூர் நாராயணன் அறிக்கை !



சென்னை, ஜுன் 18-

பனைத் தொழிலாளர்களுக்கு தமிழக அரசு பாதுகாப்பாக உள்ளது என நல வாரிய தலைவர் எர்ணாவூர் நாராயணன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கைவருமாறு:

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே உள்ள பெரிய தாழையில் கள் தடையை நீக்க வலியுறுத்தி பனைமரத்திலிருந்து கள் இறக்கி அதனை பொது மக்களுக்கும் நிர்வாகி களுக்கும் ஊற்றி கொடுத்துள்ளார்கள். ஒரு அரசின் கொள்கை முடிவை பின்பற்றியே மக்கள் இருந்து வருகிறார்கள். குறிப்பாக பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சி காலத்திலே கள் தடை உள்ளது. பனை நல வாரிய தலைவராக இருந்த குமரி ஆனந்தன் அவர்கள் தமிழக அரசின் கள் தடைக்கு ஆதரவு தெரிவித்துள்ளார் பதநீர் கருப்பட்டி போன்ற உற்பத்திக்காக இன்று பனைமர தொழிலாளர்கள் தமிழக முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் தொழில் செய்து வாழ்வாதாரம் செய்கிறார்கள் கடந்த ஆண்டு பனைமரத் தொழிலாளர்கள் வாரியம் சார்பாக ஒரு கோடி பனை விதைகள் விதைத்து உலக சாதனை பட்டியலில் இடம் பெற்றுள்ளோம்

அதன் பிறகு இன்று தமிழக அரசு பனைத் தொழிலாளர்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் அறிவித்து அவர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

தேர்தல் நெருங்கும் சமயம் போராட்டம் நடத்தி சிலர் அரசியல் ஆதாரம் தேடுகிறார்கள்.

அ.தி.மு.க. ஆட்சியில் 10 ஆண்டுகளாக பனைமர தொழிலாளர்கள் நலனுக்காக அரசு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில் தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன் மீண்டும் பனை நல வாரியம் அமைத்து பனைத் தொழிலாளர்கள் பாதுகாவலராக தமிழக அரசு இன்று திகழ்ந்து வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு எர்ணாவூர் நாராயணன் தெரிவித்துள்ளார்.

### விருத்தாசலம் நகராட்சியில்

# காலனி என்ற பெயர் நீக்கப்பட்டு தெருக்களுக்கு பூக்கள், பழங்கள் பெயர்!

### நகர மன்றத் தலைவர் டாக்டர் சங்கவி முருகதாஸ் அறிவிப்பு



விருத்தாசலம், ஜுன் 18-

விருத்தாசலம் நகரமன்ற தலை வர் டாக்டர் சங்கவி முருகதாஸ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மண்ணின் பூர்வகுடிகளை அடிமையின் குறியீடாகவும், தீண்டாமையின் அடையாளமாகவும் காலனி என்ற சொல் புழக்கத்தில் உள்ளது. சமூகத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும், பல தலைமுறைகள் கடந்தும் அவர்களை இழிவுபடுத்த இந்த சொல் பயன்பட்டு வந்துள்ளது.

இதை உணர்ந்து எல்லோருக்கும் எல்லாம் என்ற கோட்பாட்டோடு ஆட்சி நடத்தி வரும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், காலனி என்றசொல் அரசு ஆவணங்களில் இருந்து நீக்கப்படும் என அறிவித்துள்ளார். அந்த வகையில் விருத்தாசலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் காலனி என்ற பெயரோடு இருக்கும் தெருக்களில் காலனி என்ற சொல் நீக்கப்பட்டு அதற்கு பதில் பூக்கள், பழங்கள் பெயர் வைக்கப்படும்.

மேலும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கோப்புகளில் காலனி என்ற சொல் நீக்கப்படும். இதற்கான தீர்மானம் வருகிற நகர மன்ற கூட்டத்தில் நிறை வேற்றப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சின்னசேலம் வடக்கு ஒன்றியம், எலியத்தூர் ஊராட்சியில் ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு துணை தலைவர் அன்புமணிமாறன் ஏற்பாட்டில் தேமுதிக, தவெக கட்சியில் இருந்த இளைஞர்கள், பெண்கள் என 100க்கும் மேற்பட்டோர் வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைந்து கொண்டனர், புதிதாக திமுகவில் இணைந்தவர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் கழக இருவண்ண வேஷ்டி மற்றும் புடவை அணிவித்து அன்புடன் வரவேற்று வாழ்த்துக்கள் தெரிவித்தார்,இதில் சங்கராபுரம் தொகுதி பொறுப்பாளர் வ.அன்பழகன், ஒன்றிய கழக செயலாளர்கள் ந.ஆறுமுகம், எஸ்.பி.அரவிந்தன், பேரூர் கழக செயலாளர்கள் செந்தில்குமார், துரை.தாகப்பிள்ளை, சி.ஜெயவேல் ஊராட்சி மன்ற தலைவர் லோகநாதன், துணை தலைவர் பச்சையம்மாள் அண்ணாமலை ஆகியோர் உடன் உள்ளனர்.